சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:08.11.2024

PW1: கருப்பசாமி த/பெ– தங்கத்துரை

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் இந்த வழக்கின் 9ம் வாதி ஆவேன். நான் பி.எஸ்.சி படித்துள்ளேன். வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியும். சர்வே எண்.964/2ல் 3 ஏக்கர் 82 செண்ட் எங்களுக்கு பாத்தியம் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். எங்களது தரப்பு ஆவணங்களை படித்து பார்த்துள்ளேன். 3 ஏக்கர் 82 செண்டிற்கு நான் தீர்வை செலுத்தியதாக ரசீது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து ஆதியில் தங்கவேல் தேவர், கிருஷ்ணம்மாள் ஆகியோர்களுக்கு பாத்தியம் என்று பிராதில் சொல்லியுள்ளேன். அவர்களுக்கு ராமானுஜம்மாள், பெருமுளாயி மற்றும் தேனாம்மாள் ஆகிய பெண்மக்கள் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரை விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி 3 பெண் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காததால் அசல் வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அதனால் அவர்களை ஏன் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் 1948ல் தங்கையாதேவர் காலமாகிவிட்டதால் முருகானந்தமும், சிங்கத்துரையும் வழக்குரை சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டனர். பாகம் பிரித்து கொண்ட சமயத்திலோ, அதற்கு முன்போ

மேற்படி 3 பெண் வாரிசுகளிடம் இருந்தும் தாவா சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கினோமா என்றால் அவசியமில்லை. மேற்படி 3 பெண் வாரிசுகளிடமும் பாக பாத்தியம் விடுதலை வாங்காத பட்சத்தில் அவர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து சிவகாசி-ஸ்ரீவில்லிபுத்தூர் ரோட்டில் சிவகாசியில்இருந்து 7 கிமீ துாரத்தில் உள்ளது. தற்போது அந்த பகுதியில் ஏக்கர் சுமார் 1 கோடி ரூபாய் பெறும். தற்போது அந்த பகுதியில் உள்ள நிலங்கள் ஏக்கர் சுமார் 2 கோடிக்கு மேல் மதிப்பு பெறும் என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் உத்தரவு சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, மதுரை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்துள்ளோம். பட்டா மாறுதல் சம்மந்தமாக நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் எந்தவித சீராய்வு மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அவ்வாறு தாக்கல் செய்திருந்தால் அதன் உத்தரவை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு மாவட்ட வருவாய் அலுவலா் உத்தரவு பிறப்பித்திருந்தால் அதன் மீது நில நிர்வாக ஆணையரிடம் மேல் முறையீடு செய்திருப்போம் என்றால் சரியல்ல. பட்டா சம்மந்தமான எங்களது பரிகாரங்கள் உரிமையியல் நீதிமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கோபால்சாமி நாயக்கர், ராமசாமி நாயக்கரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 சர்வே எண்ணுக்கும், விஸ்தீரணத்திற்கும் இடையே முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல, சர்வே எண். 964/2 ல் மொத்தம் உள்ள 7 ஏக்கர் 64 செண்டில் தென்பகுதியில் எங்களுக்கு 3 ஏக்கர் 82 செண்ட் பாத்தியம் என்று ஆவணங்கள் உள்ளது. வா.சா.ஆ.2 ல் அவ்வாறு சொல்லப்படவில்லை

என்று சொன்னால் சரியல்ல. கிரைய பத்திரத்தின் படி வருவாய் ஆவணங்களில் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.964/2 ல் வேலுச்சாமி, முத்துசாமி, ராஜன், சிங்கத்துரை மற்றும் முருகானந்தம் ஆகியோர்கள் பெயர்களில் உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி 5 பேர்களில் வழங்கப்பட்ட பட்டா விஸ்தீரணத்தை நான் கூட்டல் செய்து பார்த்தேன் என்றால் சரிதான். அது பட்டாப்படி 4 ஏக்கர் 26 செண்ட் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது ஆவணத்தின் அடிப்படையில் வழக்குரை சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 5 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து நான் மேல்முறையீடு செல்லவில்லை என்றால் வித்தியாச படாததால் நான் மேல்முறையீடு செல்லவில்லை. 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை தாக்கல்செய்த விபரம் எனக்கு தெரியும். அதில் அவருக்கு 08.12.2021ம் தேதியில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம் தெரியும். அதில் தாவா சொத்துக்களை சர்வே செய்து அளந்து உத்தரவு பிறப்பிக்க வருவாய்த்துறைக்கு ஆணையிடப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பு தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தினை அளக்கக்கூடாது என்ற எண்ணத்தில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.அதேபோல் நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த ரிட் மனு கடந்த 28.06.2022ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், சொத்துக்கள் சம்மந்தமாக சிவில் நீதிமன்றத்தில் முறையீடு செய்யும் படி

கூறப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களது பெயர்களில் தாவா சொத்துக்களாக நாங்கள் குறிப்பிட்டுள்ளதில் ஒரு பகுதிக்கு உரிய முறையில் பட்டா பெற்று தீர்வை செலுத்தி சட்ட நிர்ணய காலத்திற்கும் மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அனுபவம் செய்து வரும் பகுதியை பொறுத்து நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. சர்வே எண். 964/2 உட்பிரிவு செய்யப்பட்டு 964/2 ஏ 2 என்று முருகானந்தம் பெயரில் பட்டா வழங்கியுள்ளது குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 964/2 உட்பிரிவு செய்யப்பட்டு 964/2 ஏ 1 டி என்று சிங்கத்துரை பெயரில் பட்டா வழங்கியுள்ளது குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். சிங்கத்துரை மற்றும் முருகானந்தமும் எந்த விஸ்தீரணத்தில் அனுபவத்தில் இருந்தார்களோ அந்த இடத்திற்கு தான் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதனால் தான் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல, மீதி பகுதியை நாங்கள் பண்ணைக்குட்டையாக பயன்படுத்தி வருகிறோம். வா.சா.ஆ.6 ஆவணம் 26.11.2009 ல் பெறப்பட்டதாகும். அப்போதே இந்த விஸ்தீரணத்திற்கு தான் பட்டா வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மீதி இடத்தை நாங்கள் பண்ணைக்குட்டையாக பயன்படுத்தி வந்த இடத்திற்கு பட்டா வழங்காததை குறித்து நாங்கள் வருவாய்த்துறையிடம் எந்த விதமான முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான், ரசீது போடவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். வா.சா.ஆ.8 ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்குரை சொத்தின் விஸ்தீரணத்தை அனுபவம் செய்யாததால் தான் பட்டா பெறவும் மற்றும் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணம் சுமார்

10 வருடத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்று சொன்னால் வழக்கு தாக்கல்செய்த பின்னர் தான் தெரியும். தாவா வழக்கு 27.07.2022 ல் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணத்தின் நகலை 15.12.2021 ல் பெற்றுள்ளேன் என்றால் எனது உறவினர்கள் எடுத்திருப்பார்கள். ஆனால் வா.சா.ஆ.10 ஆவணத்தை நான் தான் எடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான், அதனால் நான் நீதிமன்றத்தில் தவறான சங்கதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஏ 3 மொத்தவிஸ்தீரணம் 0.56.50 ஏர்ஸ் ராவனேஸ்வரனின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு அவரது காலத்திற்கு பின்பு ராவனேஸ்வரன் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது வரை அவர் தான் அனுபவம் செய்து தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் கொடிவழி ஜாபிதாவில் மேற்கூறிய 3 பெண் வாரிசுகளை காட்டாமல் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் நான் கொடிவழி ஜாபிதாவை மோசடியாக உள்நோக்கத்துடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுபவத்தில் இல்லாத விஸ்தீரணத்தை பொறுத்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் காட்டியுள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. நான் பட்டாபடி எவ்வளவு விஸ்தீரணத்தில் அனுபவத்தில் இருக்கிறேனா அதை தான் சொத்துவிபரத்தில் காட்டியிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சொத்து விபரம் தவறானது என்பதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் சட்டத்திற்குட்பட்டு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டுமே உயில் சாசனத்தின் மூலம் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி

கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் 1ம் பிரதிவாதி அவருக்கு உரிமையுள்ள சொத்தை அவரது மகனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போது வரை 1ம் பிரதிவாதியின் மகன் தான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.